# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 61/பேரூ/2023**
**நாள் : 12.04.2023**

**செல்வி. C. செல்வி,**
**சேவுகம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்**

**செயல் அலுவலர்,**
**சேவுகம்பட்டி பேரூராட்சி,**
**திண்டுக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுக்கா, சேவுகம்பட்டி பஞ்சாயத்து, வத்தலக்குண்டு, நாகலாபுரம் குறிஞ்சி நகர், கதவு எண்.4B என்ற முகவரியைச் சேர்ந்த செல்வி. C. செல்வி என்பவரது 16.02.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.02.2023 அன்று பெறப்பட்டு 61/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலூக்கா, சேவுகம்பட்டி பஞ்சாயத்து, வத்தலக்குண்டு, நாகலாபுரம் குறிஞ்சி நகர், கதவு எண்.4B என்ற முகவரியைச் சேர்ந்த செல்வி. C. செல்வி என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

“திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், சேவுகம்பட்டி பேரூராட்சி நகர எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13, நாகலாபுரம் குறிஞ்சி நகர் சர்வே எண்.1084/1, சொத்து வரி எண்.1401, குடிநீர் கட்டண எண்.968, கதவு எண்.4B இலக்கமுள்ள எனது வீட்டிற்கு தெற்குப் பக்கம் பொது மக்கள் நடைபாதை உள்ளது. மேற்படி நடைபாதையில் சட்டவிரோதமாக திட்டை கட்டி ஆக்கிரமிப்பு செய்துகொண்டு என் வீட்டில் என்னை நிம்மதியாக வாழவிடாமல் நாகலாபுரத்தைச் சேர்ந்த திரு. குழந்தை (வயது 60) S/o.சாமுவேல், திரு. செல்வராஜ், வயது (60), S/o. சடையன், திரு. தங்கவேல் (வயது 62) S/o. ராசு, திரு.ஆண்டி (வயது 50) S/o. குருவி என்பவர்கள் பல இன்னல்களையும், தொல்லைகளும் செய்து வருகிறார்கள். மேலும் பொது மக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கும், நாங்கள் வீட்டிற்குள் செல்வதற்கும் மற்றும் வெளியே போவதற்கும் மேற்படி திட்டு இடையூறாக உள்ளது. மேற்படி நான்கு பேர்களும் மற்றும் அவர்களின் தூண்டுதலின் பேரில் சிலர் குடித்துவிட்டு மேற்படி திட்டில் உட்கார்ந்து கொண்டு தகாத

வார்த்தைகளைப் பேசி என்னிடம் தினமும் சண்டை போடுகிறார்கள், பொதுமக்கள் வாகனத்தில் செல்லும்போது மேற்படி திட்டில் மோதி அடிக்கடி விபத்து ஏற்படுகிறது மற்றும் சிலர் இறந்து போய்விட்டார்கள். மேற்படி திட்டால் மனித உயிருக்கு அபாயம் உண்டாகலாம். (endangering human life) அந்த நால்வரின் செயல் எனது அமைதியான வாழ்க்கைக்கு தினசரி அச்சுறுத்தலாக உள்ளது. மேற்படி திட்டின் கீழ் பஞ்சாயத்து குழாய் மற்றும் பஞ்சாயத்து போர் போடப்பட்டு உள்ளது.

எனவே கட்டட விதிகளுக்கு புறம்பாக பொது மக்களது நடைபாதையில் கட்டியுள்ள ஆக்கிரமிப்பு திட்டை அகற்றி கட்டட விதிகளுக்கு உட்பட்டு எங்களுக்கும், அருகில் குடியிருப்பவர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் எவ்வித உயிர் சேதமோ, பொருட் சேதமோ ஏற்படாத வண்ணம் நிரந்தர உத்தரவிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி சேவுகம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 15.03.2023 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

சேவுகம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 20.03.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், சேவுகம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட பழைய வார்டு எண்.6, புதிய வார்டு எண்.13ல் சர்வே எண்.1086ல் 0.46.0 ஹெக்டேர் இடமானது வருவாய்த் துறை ஆவணங்களின்படி ஆதி திராவிடர் கிராம நத்தம் என உள்ளது. இதன் அருகில் சர்வே எண்.1084/1ல் கீழ்காணும் ஆறு நபர்களால் பட்டா பெறப்பட்டு வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறார்கள்.

| வ. எண். | ஆக்கிரமிப்பாளர் பெயர் | ஆக்கிரமிப்பின் தன்மை | ஆக்கிரமிப்பு பரப்பளவு |
|---|---|---|---|
| 1. | திரு. செந்தில்வேல் | கார் ஷெட் | 6 மீட்டர் |
| 2. | திருமதி. ரத்தினம், க/பெ. சந்திரன் | சுவர் | 2 அடி |
| 3. | திருமதி. மங்களம், க/பெ.ரங்கராஜன் | சுவர் | 1 அடி |
| 4. | திரு. செந்தில்குமார், த/பெ. கைலாசம் | சுவர் | 2 அடி |
| 5. | திரு. சக்திவேல் | காலியிடம் | - |
| 6. | திருமதி. விஜயா, க/பெ. பழனிக்குமார் | சுவர் | 2 அடி |

மேற்காணும் சர்வே எண்.1084ல் குடியிருக்கும் நபர்களால் சர்வே எண்.1086ல் ஆதி திராவிடர் நத்தம் என்ற இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

நிலக்கோட்டை ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியரின் 27.06.2000 நாளிடப்பட்ட நடவடிக்கைகளின்படி சேவுகம்பட்டி கிராமம் சர்வே எண்.1086ல் 0.46.0 ஹெக்டேர் நிலம் ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க நில எடுப்பு செய்யப்பட்டுள்ளது எனவும், இதில் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கிராம ஆதிதிராவிடர் மக்கள் பகவதியம்மன் கோவில், ஊர் சாமி கோவில், மதுரைவீரன் சாமி கோவில், காளியம்மன் கோவில், கன்னிமார் சாமி கோவில் ஆகிய கோவில்கள் கட்டி பரம்பரையாக நீண்ட காலமாக தெய்வ வழிபாடு

செய்து வருகின்றனர். மேற்படி இடத்தில் ஜாதி இந்துக்கள் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள சேவுகம்பட்டி கிராம நிர்வாக அலுவலர், வத்தலக்குண்டு வருவாய் ஆய்வாளர் (ஆ.தி.ந.) மற்றும் செயல் அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மேற்கண்ட ஆக்கிரமிப்புதாரர்களுக்கு இப்பேரூராட்சியின் மூலமாக பல அறிவிப்பு நோட்டீஸ்கள் வழங்கியும் ஆக்கிரமிப்பு அகற்றப்படாததால் இறுதியாக 12.11.2018 அன்று இப்பேரூராட்சியின் மூலம் ஆக்கிரமிப்பு அகற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையில் மேற்காணும் ஆறு குடியிருப்புதாரர்கள் ஏற்கனவே அகற்றம் செய்யப்பட்ட இடத்தில் மீண்டும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், அதை உடனே அகற்றி ஆதி திராவிடர் நத்தம் இடத்தை பாதுகாத்து தர வேண்டுமாயும் 15.07.2019 நாளிடப்பட்ட மனுவில் திரு. எஸ். குழந்தை என்பவர் கோரியுள்ளார். மேலும் இது தொடர்பாக மனு நீதி நாளில் வன்கொடுமை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கூறியுள்ளார்.

திண்டுக்கல் துணை ஆட்சியரால் 14.07.2019 அன்று நேரடி ஆய்வு செய்ததன் மூலமும், நிலக்கோட்டை தனி வட்டாட்சியரின் (ஆ.தி.ந.) 18.07.2019 நாளிடப்பட்ட கடிதத்தின் அடிப்படையிலும் புல தணிக்கை மேற்கொண்டு ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுத்து திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க கோரி வரப்பெற்ற கடிதத்தின் பேரில் காவல் துறையின் உரிய பாதுகாப்பு கேட்டு கடிதம் வைக்கப்பட்டு மேற்படி இடம் சர்வே எண்.1086ல் ஆதி திராவிடர் நத்தம் பகுதியில் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புகளை 20.07.2019ம் தேதியன்று அனைத்து ஆக்கிரமிப்புகளும் நிலக்கோட்டை தனி வட்டாட்சியர் (ஆ.தி.ந.). வருவாய் ஆய்வாளர் (ஆ.தி.ந.), வத்தலகுண்டு கிராம நிர்வாக அலுவலர், சேவுகம்பட்டி ஆகியோர் முன்னிலையில் வத்தலக்குண்டு காவல் சார்பு ஆய்வாளர் தலைமையில் உரிய காவல் துறை பாதுகாப்புடன் செயல் அலுவலர் அலுவலக, இளநிலை உதவியாளர், வரித்தண்டலர் மற்றும் துப்புரவு பணியாளர்களுடன் ஆக்கிரமிப்பு முழுவதும் அகற்றம் செய்யப்பட்டு விட்டது.

மேற்கண்ட பட்டியலில் வரிசை எண்.2ல் காணும் திருமதி. ரத்தினம் என்பவர் தனது வீட்டை திரு. சந்திரன் என்பவருக்கு கிரையத்திற்கு விற்றுள்ளார். திரு. சந்திரன் என்பவரால் தனது மகள் செல்வி என்பவருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டு செல்வியின் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அந்த வீட்டில் தற்போது செல்வி வசித்து வருகிறார்.

சர்வே எண்.1084/1ல் வசித்து வரும் நபர், ஆதி திராவிடர்களுக்கு சொந்தமான சர்வே எண்.1086ல் கிராம நத்தத்தில் உள்ள மதுரை வீரன் கோவில் திட்டை, இடையூறாக இருப்பதாகவும், விபத்துகள் ஏற்படுவதால் திட்டை அகற்றுமாறும் புகார் அளித்துள்ளார். மேற்படி திட்டு அமைந்துள்ள இடமானது சர்வே எண்.1086க்குட்பட்டதாகும். இவ்விடமானது ஆதிதிராவிடர் கிராம நத்தம் ஆகும். இந்த திட்டானது வடக்கு 15 அடி அகலமுள்ள காலியான இடத்தில் உள்ளது. அதை ஒட்டி 10 அடி, பேரூராட்சியின் மூலம் தார்ச் சாலை அமைக்கப்பட்டு தார்ச்சாலையை ஒட்டி தெற்கே 5 அடி காலி இடமும் உள்ளது என்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தெரிவிக்கும் திட்டு இடத்தின் வரைபடத்தின் நகல் (FMB Sketch) மற்றும் புகைப்பட நகல் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக திரு. செந்தில்குமார் என்பவரால், தன் வீட்டுச் சுற்றுச் சுவரை இடிக்கக்கூடாது என நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.O.S.No.178/2018 தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேற்படி புல எண். தொடர்பாக நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.178/2018ல் பிரதிவாதிகளாக முறையே 1. செயல் அலுவலர், சேவுகம்பட்டி பேரூராட்சி 2. தனி தாசில்தார், ஆதி திராவிடர் நலம், நிலக்கோட்டை, 3. மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மாவட்டம் ஆகியோர் பிரதிவாதி தரப்பினர்களாக உள்ளனர். இவ்வழக்கு தாக்கல் செய்து வாதி தரப்பு சாட்சியம் 10.03.2023ல் முடிந்து பிரதிவாதி தரப்பு சாட்சியம் 03.04.2023 ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேலும் சர்வே எண்.1084ல் வசிக்கும் குடியிருப்புதாரர்கள் 1086ல் ஆதி திராவிடர் நத்தம் பகுதியை நடைபாதையாக பயன்படுத்தி வருகின்றனர். இவர் மீண்டும் மீண்டும் சர்வே எண்.1086 ஆதி திராவிடர் நத்தம் பகுதியை ஆக்கிரமிப்பு செய்வதற்காக, மதுரை வீரன் சாமி கோவில் திட்டை இடையூறாக இருப்பதாக பொய்யான செய்தியை தெரிவித்து புகார் கூறியுள்ளார் என்ற விபரத்தை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 21.03.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.03.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

21.03.2023 அன்று மனுதாரர் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், சேவுகம்பட்டி பேரூராட்சி சர்வே எண் 1084/1 கதவு எண்.4B–யில் அமைந்துள்ள எனது வீட்டிற்கு தெற்கு பக்கம் பொதுமக்கள் நடைபாதை உள்ளது. மேற்கண்ட நடைபாதையில் சட்ட விரோதமாக ஒரு சிலர் திட்டை கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். தெருவிலிருந்து எனது வீட்டிற்கு இடைஞ்சலாக அமைந்துள்ள மேற்கண்ட திட்டு ஒரு சிலர் தூண்டுதலின்பேரில் அமைத்துள்ளனர். மேற்கண்ட திட்டில் இரவு நேரங்களில் சமூக விரோதிகள் அமர்ந்து அவ்வழியே செல்லும் பாதசாரிகளை ஏசியும், வீண் வம்பும் செய்து வருகின்றனர். இரவு நேரத்தில் மேற்கண்ட திட்டில் மோதி வாகனங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன. ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள திட்டு தொடர்பாக பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் காவல் நிலையத்தில் புகார் மனுக்கள் அளித்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, விதிகளுக்கு புறம்பாக பொதுமக்கள் நடைபாதையில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள திட்டை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான புகைப்பட நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் எனது 16.2.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

21.03.2023 அன்று சேவுகம்பட்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், சேவுகம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 சர்வே எண் 1084ல் வசித்துவந்த திரு. சந்திரன் என்பவர், மனுதாரரான தனது மகள் செல்வி என்பவருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி கொடுக்கப்பட்டு, மேற்கண்ட வீட்டின் சொத்து வரி செல்வி என்பவரின் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவர் தற்போது அவ்வீட்டில் வசித்து வருகிறார். அவரது வீட்டின் அருகில் அங்குள்ள ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வணங்கும் கோவிலுடன் கூடிய திட்டு அமைந்துள்ளது. சர்வே எண் 1086ஐச் சேர்ந்த மேற்கண்ட கோவிலாக பாவிக்கப்படும் திட்டை அகற்றிட மனுதாரர் மனுக்களை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பாக வருவாய்த் துறை ஆவணங்களை சரிபார்த்தபோது திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், சேவுகம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 சர்வே எண் 1086ல் 0.45.0 ஹெக்டேர் இடம் வருவாய்த் துறை ஆவணங்களின்படி ஆதி திராவிடர் கிராம நத்தம் என உள்ளதை அறிய முடிகிறது. மேற்கண்ட இடத்தில் 10க்கு 10 என்கின்ற அளவில் அமைந்துள்ள, மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள திட்டு, 15 அடி அகலமுள்ள காலியான இடத்தில் உள்ளது எனவும், அதையொட்டி பேரூராட்சியின் தார்சாலையும், 5 அடி காலியிடமும் உள்ளது என்பதையும், மேற்கண்ட திட்டினால் மேற்கண்ட பகுதியில் எவ்வித வாகன போக்குவரத்து இடைஞ்சலும் ஏற்பட வாய்ப்பில்லை எனவும் மேலும் மனுதாரரின் வீட்டிற்கு சென்று வர மேற்கண்ட திட்டு தடையாக இல்லை எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் அளிக்கப்படும் எனது 20.3.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு வாக்குமூலம், சேவுகம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டியை சேர்ந்த மனுதாரர் செல்வி C. செல்வி என்பவர் தனது 16.02.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் சேவுகம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே

எண்.1084/1; கதவு எண்.4Bல் உள்ள தனது வீட்டிற்கு தெற்கில் அமைந்துள்ள நடைபாதையில் சிலர் விதிமீறி திட்டை கட்டி சட்ட விரோத செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், திட்டு அமைக்கப்பட்டதால் பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் செல்ல இடையூறாக உள்ளதாகவும் மற்றும் இரவு நேரத்தில் வாகனங்கள் மோதி விபத்துக்கள் ஏற்படுவதாகவும் புகார் தெரிவித்து, அத்திட்டினை அகற்றிட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் செல்வி C. செல்வி என்பவர் சேவுகம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.1084/1ல் குடியிருந்து வருகிறார். மனுதாரர் அகற்றக் கோரும் திட்டானது, மனுதாரரின் குடியிருப்புக்கு தெற்கில் வருவாய்த்துறை ஆவணங்களின்படி சர்வே எண்.1086-ல் ஆதிதிராவிடர் கிராம நத்தம் என்ற வகைப்பாட்டில் 15அடி அகலமுள்ள காலி இடத்தில் அமைந்துள்ளது.

ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் வகையில் சர்வே எண்.1086ல் 0.45.0 ஹெக்டேர் நிலமானது வருவாய்த் துறையால் 27.6.2000 அன்று நில எடுப்பு செய்யப்பட்டு, மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்புகள் செய்யாவண்ணம் இருத்தல் வேண்டும் என்பது நிலக்கோட்டை ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியரின் கடித மூ.மு.864/2000 அ 27.6.2000 நாளிட்ட நடவடிக்கை ஆணை மூலம் தெரியவருகிறது.

இந்நிலையில் மேற்காணும் ஆதிதிராவிடர் நத்தம் என்கிற வகைப்பாட்டில் உள்ள சர்வே எண்.1086ல், மனுதாரர் செல்வி C. செல்வி என்பவரின் தாயார் திருமதி. ரத்தினம் க/பெ. சந்திரன் மற்றும் 5 குடியிருப்புதாரர்கள் சுவர் கட்டியும், கார் ஷெட் அமைத்தும் மற்றும் காலி இடத்திலும் ஆக்கிரமிப்பு செய்ததைத் தொடர்ந்து சேவுகம்பட்டி பேரூராட்சியால் 12.11.2018 அன்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

இந்நிலையில் சர்வே எண்.1084ல் குடியிருக்கும் 6 குடியிருப்புதாரர்கள், சர்வே எண்.1086ல் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட இடத்தினை மீண்டும் ஆக்கிரமிப்புகள் செய்துள்ளனர் என வரப்பெற்ற புகாரின் அடிப்படையில், சேவுகம்பட்டி பேரூராட்சியால் வருவாய்த் துறை அலுவலர்கள் முன்னிலையில் காவல்துறை உதவியுடன் 20.07.2019 அன்று மீண்டும் ஆக்கிரமிப்புகள் முழுவதும் அகற்றப்பட்டன என்பது பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரியவருகிறது.

நிலக்கோட்டை ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியரின் 27.6.2000 நாளிட்ட நடவடிக்கைகள் ஆணையில், சேவகம்பட்டி கிராமம் சர்வே எண்.1086ல் 0.45.0. ஹெக்டேர் பரப்பளவு நிலமானது ஆதி திராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க நில எடுப்பு செய்யப்பட்டு இதில் பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கிராம ஆதிதிராவிடர் மக்கள் கோவில்கள் கட்டி பரம்பரையாக நீண்ட காலமாக தெய்வ வழிபாடு செய்து வருவதால், மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் பாதுகாக்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட ஆதிதிராவிடர் கிராம நத்தம் என்ற வகைப்பாட்டில் சர்வே எண்.1086ல் அமைந்துள்ள மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள திட்டானது 15 அடி அகலமுள்ள காலியான இடத்தில் அமையப் பெற்றுள்ளது என்பதும், இதை ஒட்டி பேரூராட்சியின் 10 அடி தார்சாலையும் மற்றும் 5 அடி காலியிடமும் அமைந்துள்ளதால் மேற்கண்ட திட்டினால் எவ்வித வாகன போக்குவரத்து இடையூறும் இல்லை என்பதும், மனுதாரரின் வீட்டிற்கு சென்று வர மேற்கண்ட திட்டானது தடையாக

இல்லை என்பதையும், பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக அறியமுடிகிறது. இந்நிலையில், சேவுகம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்துவைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, ஏப்ரல் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) Ms. C. செல்வி,
த/பெ. P. சந்திரன்,
கதவு எண்.4B, நாகலாபுரம் குறிஞ்சி நகர்,
யூனியன் ஆபிஸ் பின்புறம், வத்தலக்குண்டு,
சேவுகம்பட்டி பஞ்சாயத்து, நிலக்கோட்டை தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம்.

2) மாவட்ட ஆட்சித் தலைவர்,
திண்டுக்கல் மாவட்டம் - 624 004.

3) செயல் அலுவலர்,
சேவுகம்பட்டி பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

5) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம் ,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

12/4/23
உதவிப் பதிவாளர்.

17/04/23